Office of the Director of Indian Medicine & Homoeopathy
30 NOV 2020
★ Chennai-600 106.★

சுருக்கம்

பொதுப்பணிகள் – தமிழ்நாடு அமைச்சுப் பணி – கருணை அடிப்படையில் பணிநியமனம் – திரு.வெ.சரவண நேரு (த/பெ. (லேட்) பெ.வெள்ளையன்) இளநிலை உதவியாளர் பதவியில் பணிநியமனம் – பணிவரன்முறை செய்து – ஆணை வெளியிடப்படுகிறது.

---

மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்பநலத் (ஏடி2) துறை

அரசாணை (2ப) எண்.141

நாள் : 23.11.2020
திருவள்ளுவர் ஆண்டு 2051
சார்வரி, கார்த்திகை – 08

படிக்க:-

1. அரசாணை (நிலை) எண்.100, பணியாளர் மற்றும் நிருவாகச் சீர்த்திருத்தத் (எம்) துறை, நாள். 01.08.2018.
2. இந்திய மருத்துவம் (ம) ஓமியோபதி இயக்குநர் அவர்களிடமிருந்து பெறப்பட்ட கடித ந.க.எண்.6648/நி2/2/2020, நாள். 05.08.2020.
3. அரசாணை (நிலை) எண்.18, தொழிலாளர் (ம) வேலைவாய்ப்புத் துறை, நாள். 23.01.2020.

******

**ஆணை:-**

பார்வை இரண்டில் படிக்கப்பட்ட இந்திய மருத்துவம் (ம) ஓமியோபதி இயக்குநர் தனது கடிதத்தில், சிவகங்கை மாவட்டம், திருப்பத்தூர், அரசு மருதுபாண்டியர் மருத்துவமனையில் சித்த மருந்தாளுநராகப் பணியாற்றிய பெ.வெள்ளையன் என்பவர் 29.10.2000 பணியிடையே மரணமடைந்து விட்டார் என்றும், அவர் அப்பணியில் தகுதிகாண் பருவம் முடிக்கப்பெற்றவர் என்றும், அவரின் பிறந்த தேதி 20.08.1946 என்றும், அவருடைய உத்தேச ஓய்வு பெறும் நாள் 31.08.2004 என்றும் குறிப்பிட்டு, இறந்த அரசு ஊழியரின் மகன் தனக்கு பணிநியமனம் வேண்டி 09.02.2001 அன்று விண்ணப்பித்திருந்தார் என்றும், அவரது பிறந்த தேதி 25.05.1978 என்றும், மனுதாரராகிய திரு.வெ.சரவண நேரு என்பவர் பத்தாம் வகுப்பு தேர்ச்சி பெற்று கருணை அடிப்படையில் இளநிலை உதவியாளராகப் பணிநியமனம் பெறுவதற்கான ஏனைய தகுதிகளையும் பூர்த்தி செய்திருந்ததால், அவரை தற்காலிகமாகக் கருணை அடிப்படையில் தமிழ்நாடு அமைச்சுப் பணியில் இளநிலை உதவியாளராகப் பணியமர்த்த உத்தரவிடப்பட்டு, அதன்படி இளநிலை உதவியாளராக 20.09.2019 முற்பகல் பணியில் சேர்ந்துள்ளார் என்றும் குறிப்பிட்டு, தனியர் இளநிலை உதவியாளராகப் பணியில் சேர்ந்த நாளான 20.09.2019 முற்பகல் முதல் பணிவரன்முறை செய்து ஆணை வெளியிடுமாறு அரசைக் கேட்டுக்கொண்டுள்ளார்.

2. இந்திய மருத்துவம் (ம) ஓமியோபதி இயக்குநர் அவர்களின் கருத்துருவை அரசு பரிசீலித்து, அதனை ஏற்று, திரு.வெ.சரவண நேரு, இளநிலை உதவியாளர் என்பவரின் பணியினை, அவர் தமிழ்நாடு அமைச்சுப் பணியில் சேர்ந்த நாளான 20.09.2019 முற்பகல் முதல் அவர் அப்பணிக்குத் தேவையான உடற்தகுதி பெற்றிருக்க வேண்டும் என்ற நிபந்தனைக்குட்பட்டு வரன்முறை செய்து அரசு ஆணையிடுகிறது.

3. இவ்வாணை தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்புத் துறை மற்றும் பணியாளர் மற்றும் நிருவாகச் சீர்த்திருத்தத் துறையின் இசைவுகளை முறையே அவற்றின் அ.சா.எண்.16465/க்யூ1/2020-2, நாள் 12.11.2020 மற்றும் அ.சா.எண்.30355/ஜி2/2020-1, நாள் 18.11.2020-இல் பெற்று வெளியிடப்படுகிறது.

(ஆளுநரின் ஆணைப்படி)

ஜெ. ராதாகிருஷ்ணன்,
அரசு முதன்மைச் செயலாளர்.

பெறுநர்
இந்திய மருத்துவம் (ம) ஓமியோபதி இயக்குநர், சென்னை-600 106.
✓திரு.வெ.சரவண நேரு, இளநிலை உதவியாளர் (உரிய வழியாக)
மாநில கணக்காயர், சென்னை-600 018.
நகல்
தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்புத் துறை, சென்னை-600 009.
பணியாளர் மற்றும் நிருவாகச் சீர்த்திருத்தத் துறை,சென்னை-600 009.
மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்பநலத் (தகவுப்பிரிவு) துறை, சென்னை-600 009.
இருப்பு கோப்பு / உதிரி நகல்.

//ஆணைப்படி அனுப்பப்படுகிறது//

27/11/2020
பிரிவு அலுவலர்
27/11/2020

நகலெண் - 1121/ /2020 நாள் - 02.21.
அனுப்பப்படுகிறது.

15/2/24
முதல்வர்
அரசு ஓமியோபதி மருத்துவக் கல்லூரி
மற்றும் மருத்துவமனை
திருமங்கலம் - 625 706.
மதுரை மாவட்டம்.
15.2.24

பெறுநர்:-
திரு. வெ.சரவண நேரு, இளநிலை உதவியாளர்
அ ஓ ம கல் மனை, திருமங்கலம்.